# காங்கிர



விலை 20 காசு

4 — 7.

10-9-67

# ஒரே வழி

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி

"இந்தி மொழிதான் இந்தியாவின் ஆட்சிமொழி. இதனை அரசியல் சட்டமே கூறுகிறது.

இந்தியை ஏற்க முடியாது—என்று கூறுபவர்கள் அரசியல் சட்டத்தை மீறுபவர்களாகும்.''

இக்கருத்தை கனம் மொரார்ஜிதேசாய் அவர்கள் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

பொதுவாக அரசியல் சட்டம் என்பது எந்த நாட்டிலும் கைபடாத ரோஜா அல்ல.

சுமார் 200 வருடங்களுக்குமுன்பு உருவாக்கப்பட்ட அமெரிக்க அரசியல் சட்டம் திருத்தப்படுவதற்கு, முக்கால்வாசி ராஜ்யங்கள் (State) ஒப்புதல் தரவேண்டும் என்ற நடைமுறை இருந்துங்கூட 1961 வரை 23 தடவை திருத்தப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியல் சட்டம் திருத்தப்பட பெரும்பான்மை மக்கள் தீர்மானிக்க வேண்டும்-என்ற நடைமுறை இருந்துங்கூட பல முறை திருத்தப்பட்டுள்ளன.

இருபது வருடங்கள்கூட ஆகாத இந்திய அரசியல் சட்டம் இதுவரை 21 முறை திருத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதர நாடுகளின் அரசியல் சட்டத்தை 'கைப்படாத ரோஜா அல்ல'' என்று சொன்னால், இந்திய அரசியல் சட்டத்தை 'கசங்கிய மலர்''—என்று சொல்லவேண்டும்.

கசங்கிய மலர்—நிலையில் உள்ள இந்திய அரசியல் சட்டத்தை, ஏதோ கைபடாத ரோஜா மாதிரி கருதிக்கொண்டு, கனம் மொரார்ஜி தேசாய் பேசியிருப்பது அறியாமையே அன்றி வெறியா—என்பதை நாடு நன்கு எண்ணிப் பார்க்கவேண்டும்.

பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் எந்தச்சூழ்நிலையில், எப்படிப் பட்டவர்களால் உருவாக்கப்பட்டது — என்பதை ஆராய்ந்தால் ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் வேர் ஊன்றியபின் லார்டுமெக்காலே துணைகொண்டு இந்தியாவை ஆண்டுவர தொகுக்கப்பட்ட (அடிமை)ச்சட்டத்திற்கும், 1950-ல் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்திற்கும் வேறுபாடு இல்லை என்றே கூறலாம்.

எந்த ஒரு அரசியல் சட்டமும் திருத்தத்திற்கு உட்படாமல் இருந்தால் அந்தச் சட்டம் வழங்குகிற பகுதியில் 'சர்வாதிகார ஆட்சி' நடப்பதாகவே பொருள்.

எந்த ஒரு பகுதியையும் திருத்தத்துக்கு உட்பட்ட அரசியல் சட்டம் ஆண்டு வரும்போது, அந்த சட்டத்துக்கு விரோதமாக கருத்துத் தெரிவிக்க எவருக்கும் உரிமை உண்டு.

இந்த அடிப்படையில் இந்திய அரசியல் சட்டத்தில் 'இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி' என்று இருந்தாலும் அதை மறுத்தோ அல்லது மாற்றியோ கூற ஒரு சாதாரண இந்தியக் குடிமகனுக்கு உரிமை உண்டு.

இந்தியாவின் ஆட்சி மொழியாக 'செத்த மொழி' என்று சொல்லப்படுகிற சமஸ்கிருதம் இருக்கவேண்டும் —அதற்கேற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் — என்று கூறிடவும் உரிமை உண்டு.

''இந்தியாவுக்கு என்று ஒரே ஒரு ஆட்சி மொழியே தேவை இல்லை.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ராஜ்யத்திலும் அந்தந்த ராஜ்ய மொழியே ஆட்சிமொழி.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ராஜ்யத்தையும் இணைக்கிற மொழியாக—சுப்ரீம் கோர்ட் மொழியாக—எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவாக உள்ள மத்திய அரசுமொழியாக—ஏற்கனவே பழக்கத்தில் இருந்து வருகிற ஆங்கில மொழிதான் இருக்கவேண்டும்.''

இவ்வாறு அழுத்தந் திருத்தமாகக் கூறுவதற்கும் — கூறுகிறபடி இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கும், எண்ண எழுத பேச முயல — இந்திய அரசியல் சட்டத்தில் ''ஜீவாதார உரிமை'' இருக்கும்போது, இந்தி வேண்டாம் என்று கூறுவது — இந்திய அரசியல் சட்டத்துக்கு விரோதம், துரோகம் — என்று கனம் மொரார்ஜிதேசாய் கூறுவது முன் குறிப்பிட்டபடி ஒன்று அறியாமையாக இருக்க வேண்டும் அல்லது சர்வ ஆதிக்க ஆணவ வெறியாக இருக்க வேண்டும்.

இந்தியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இந்திய அரசியல் சட்டப்படி வகிக்கிற பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்—என்று தமிழக சட்ட அமைச்சர் கனம் மாதவனுக்கு யோசனை கூறிய கனம் மொரார்ஜிக்கு நாம் கூறுகிற 'புத்திமதி'' இது தான்.

இந்திய சுயராஜ்யத்திற்கும்— இந்திய அரசியல் சட்டத்திற்கும் மூலவர்களில் முக்கியஸ்தரான பண்டித நேரு அவர்கள்—

''இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகிறவரை இந்தியோடு இங்கிலீசும் நீடிக்கும்.''

—என்று எல்லோருக்கும் அளித்த உறுதி மொழியை ஏற்று செயல்படுத்தாத எவருக்கும் இந்திய அரசியலிலேயே இடம் கிடையாது — என்பதை கனம் மொரார்ஜி உணரட்டும்.

இந்தியா என்பது குறுகிய குஜராத் மாநிலம் அல்ல—இந்தி வெறி தலை தூக்கியுள்ள வடக்கே உள்ள சில மாநிலங்கள் மட்டும் அல்ல— தெற்கிலும் வடக்கிலும், கிழக்கிலும் மேற்கிலும் இரண்டாயிரம் மைல் நீள அகலமுள்ள பல இனம், பல மொழி, பல கலாசாரமுள்ள மக்கள் வாழும் பரந்த உபகண்டம்.

இந்த இந்திய உபகண்டம் இன்று போல் என்றும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றால் ஒரே வழி, பண்டித நேருவின் உறுதிமொழி,

பாதை தவறிச் செல்லும் மொரார்ஜிக்கு கனம் சாக்ளா ராஜினாமா நல்ல வழி காட்டட்டும்.

இந்திமீது வெறிகொண்டு இந்தியா சிதறிவிட வழிகோல வேண்டாம் என்று இந்திய ஒருமைப்பாட்டின் மீது ஆணையிட்டு எச்சரிக்கிறோம்.

---

முகப்பில்:

சட்டமன்ற உறுப்பினர்கள்

**ஏ. கே. மூர்த்தி,**

ஜெயங்கொண்டம்.

**எம். எஸ். மணி,**

திருச்சி—1

**ஜே. எஸ். இராசு,**

M.A. BED.

பெரம்பலூர்.

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 10 9 67 இதழ் 7

# பதவி விலகல் மூலம் படிப்பினை

மத்திய அரசின் வெளிநாட்டுத் துறை அமைச்சர் திரு. சாக்ளா, இத்திங்கள் 6-ம் நாள், தம் பதவியைத் துறந்துவிட்டிருப்பதானது, இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்ட வல்லதும், உறங்கிக் கிடக்கின்ற தம் சிந்தனையைச் செயல்படச் செய்வதுமான ஒரு அம்சமாகும்,

ஆகஸ்ட் இறுதியில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பம் காரணமாக மொரார்ஜிதேசாய்க்கும், தமிழக சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ், மாதவன் அவர்களுக்கு மிடையே நிகழ்ந்துவிட்ட விரும்பத்தகாத வாக்கு வாதத்தின் எதிரொலியாக மத்திய அரசின் உள்ளக் கிடக்கைத் தெள்ளத் தெளிவாகி விட்டதுடன், எதிர் காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்து மக்களை, மைய அரசு எந்த வழியில் நடத்திச் செல்லத் திட்டமிட்டிருக்கிற என்பதற்கு முன்னேட்டமான ஒரு ஊகமாகவும் அது மாறிவிட்டதன் அறிகுறியாகத்தான், திரு. சாக்ளா அவர்கள் தமது பதவி விலகலைத் தந்திருக்கிறார் என்பது அவரே ஒப்புக்கொண்டுள்ள ஒரு உண்மையாகும்.

திரு. சாக்ளா அவர்கள், தமது பதவி விலகல் கடிதத்தில், 'இன்னும் 5 ஆண்டுக் காலத்தில் எல்லா கல்லூரிகளிலும் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, பிராந்திய மொழிகளைப் பாடமொழி ஆக்கவேண்டும் என்று முடிவு செய்யப் பெற்று உள்ளது; இந்தத் திட்டம் சரியானது அல்ல—நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதும் அல்ல' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அத்துடன், ''ஆங்கிலம் அனைத்துலக மொழியாகும்; அதன் இடத்திற்கு இந்தி வந்தாலும் ஆங்கிலக் கல்வியின் தரத்தைக் குறைக்கக் கூடாது' என்றும் சுட்டிக் காட்டி இருப்பதானது, மத்திய அரசு தன் இந்தி வெறித் திட்டத்தில் நாட்டின் எதிர்காலத்தை எவ்வளவு பயங்கரமான பாதாளத்தில் தள்ள இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கான ஒரு சரியான அளவுகோலாகும்.

தனி ஒரு மனிதரான திரு. சாக்ளா அவர்கள் தமது பதவியைத் துறந்துவிட்டதன் மூலமாகவே, அவர் சுட்டிக் காட்டியுள்ள தீமைகள் அகன்றுவிடும் அல்லது அகற்றப்பட்டுவிடும் என்று யாரும் நம்பிவிட மாட்டார்கள். என்றாலும் இந்த பதவி விலகல் நடவடிக்கையின் மூலம் பிரச்னையின் முக்கியத்துவத்தை நாட்டவர் நல்லபடியாக அறியும் வண்ணம் சிந்தனைக்குக் கருவாக ஆக்கிவிட்டிருக்கிறார் என்பது மறுக்க முடியாத தாகும்,

இந்த நடவடிக்கைக்குப் பின், திரு. மொரார்ஜி தேசாய், அவர்களது பேச்சில் கூட 'காரம்' குறைந்திருக்கிறது; 'மழுப்பல்'கள் நிரம்பி இருக்கின்றன. அவரது பேச்சு பற்றிய வானொலி செய்திக் குறிப்பில், தாம் 5 ஆண்டுகளில் மொழி பெயர்ப்பைச் செய்யவேண்டும் என்று மட்டுமே குறிப்பிட்டதாகவும், அந்தக் காலகெடுவில் ஆங்கிலத்தை அகற்றிவிடவேண்டு எனக் குறிப்பிடவில்லையெனவும் கூறியதாக அறிவிக்கப்பட்டது.

இந்தி மொழியின் திணிப்புக்கு வக்காலத்து வாங்கும் முறையில் எந்த சொற்களால், சொல் நடனம் ஆடி இருந்தாலும் சரி, மொரார்ஜி அவர்களது 'ருத்ர' தாண்டவம் மூலம் மத்திய அரசின் 'உள்ளக் கிடக்கை' வெளிப்பட்டுவிட்டது என்னவோ உண்மைதான்!

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள ஒரு பகுதி தான் இந்தி பேசாத பகுதிகளும் என்பதை இந்திரா அம்மையார் அவர்களும், மொரார்ஜி தேசாய் அவர்களும் மறந்துவிட்டுச் செயல்படுவதைப் போலவே, மற்றவர்களும் செயல்படவேண்டும் என்று இந்தி வெறியர்கள் நினைப்பது எவ்வளவு முட்டாள் தனமானது என்பதை நிரூபிக்கும் வகையில், திரு. சாக்ளா பதவி விலகி இருப்பதும், அதற்குக் கூறி இருக்கின்ற காரணங்கள், ''இதற்கு முன் மொழித்துறை அறிஞர்கள் கூறியதை ஒத்துள்ளது'' என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டி இருப்பதும் உன்னிப்பாகக் கவனிக்கப்படவேண்டியவையாகும்.

அரசியல் அமைப்புச் சட்டம் இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்ற ஒரே ஒரு காரணத்துக்காக மட்டும் இந்திக்கு இந்த அளவு அந்தஸ்து தரவேண்டும் என்று நினைப்பது முழுக்க முழுக்க சர்வாதிகார மனப்பான்மை யுடையதென்பதைமொழியறிஞர்கள்ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தி, அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பிடித்ததற்கு—அருவெறுக்கத் தக்கதொரு வரலாறே இருந்து கொண்டிருக்கும்போது, அந்த வரலாற்றை நாடும், நல்லோரும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும்போது, மூர்க்கத்தனமான முறையில் அதைப் புகுத்த முனைவதைக் கண்டிக்காமலெப்படி இருக்க முடியும்?

கண்டித்துப் பதவி விலகிய திரு. சாக்ளாவின் தகுதிகளைப்பற்றிப் பார்க்கும்போது, இந்திய அரசு கண்மூடித்தனமான செயல்களைச் செய்வதற்கு அதன் 'அறிவு முடக்கம்'தான் காரணமா என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆங்கிலத்தை அகற்றிவிடத் துடிப்புக் காட்டுவது பற்றிக் கண்டிக்கும் திரு. சாக்ளா அவர்கள், மத்திய அரசின் கல்வி அமைச்சராக நேரு பெருமகனாரால் நியமனம் செய்துகொள்ளப் பெற்றவர் என்பதும், அதற்கு முன்னதாக தலைமை நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர் என்பதும், ஐ. நா. மன்றத்திலும், அயல் நாட்டுத் தூதராகவும் செயலாற்றியவர் என்ற அளவிலும் அரசியல் முக்கியத்துவம் பெற்றவர் அவர்.

முந்திரா ஊழல் வழக்கில் அவர் அளித்த தீர்ப்பு கேட்டு மக்கள் அவரது நுண்மாண் நுழைபுலம் பற்றி அறியும் வாய்ப்பினைப் படைத்திருக்கிறார்.

இவ்வளவு சீரிய சிறப்புக்களையும் தன்பால் அடக்க வுணர்வோடு அடக்கிக் கொண்டிருக்கும் ஒருவர் —

(15-ம் பக்கம் பார்க்க)

# பட்டமளதற்கு பணிசெய்திடவா

# நாட்டினை வாட்டம், நலிவு போக்கவா?

## பிச்சை மனம் சாகட்டும்!

### ஈகை குணம் ஓங்கட்டும்!

## மதுரை பட்டமளிப்பு விழாவில்

### அறிஞர் அண்ணா பேருரை!

ஆளுநர் அவர்களே!

இணைவேந்தரவர்களே!

துணைவேந்தரவர்களே!

பேராசிரியப் பெருமக்களே!

இன்று பட்டம்பெற வந்துள்ள இளந்தோழர்களே!

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கிறேன். இப் பல்கலைக் கழகம் தொடங்கி ஓராண்டே ஆகிறது; இதுவே முதல் பட்டமளிப்பு விழாப் பேருரையாகும். இந்த வாய்ப்பினை நான் பெற்றிடச் செய்த பல்கலைக் கழகப் பெரியோர்கட்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்மாடக்கூடலில் நிற்கிறேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தது இம் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்.

இங்கு நின்றிடும் எவருக்கும் அன்றொரு நாள், அறிவாளர் அரண் அளிக்க அரசாண்ட பாண்டியப் பெருமன்னர், தமிழ் வளர்த்து, தமிழர் தம் தனிச் சிறப்பினைக் காத்து, புகழ்க்கொடி நாட்டி, தரணி மெச்சக் கோலோச்சிவந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும்–நினைவலைகள் எழத்தான் செய்யும்.

இன்று, நான் இங்கு நின்று, பட்டச் சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும் பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகிறேன்; இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி, அறிவுப் புனலாடி, அகமகிழ்ந்திருந்தனர் என்பதனை எண்ணுகின்றேன்; இன்பத் தேன் சுவை நுகர்கின்றேன்.

மனக்கண்ணால் காணுகின்றேன்; முதுபெரும் புலவர்கள் அவைநோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், மூதறிஞர், காணீர் தமிழ் நெறியை, தாரணியோர் மெச்சி ஏற்றிடத்தக்கதோர் நன்னெறியை, ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை என்றுரைத்தவண்ணம் திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

தத்தமது ஏடுகளை, வித்தகர் போற்றிடத்தக்கவென விளக்கி, புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெலாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு, இங்கிருந்தன அற்றைநாளில்!

இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார்! நந்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது. அச்சம் தவிர்த்திடுக! நவநிதியந் தந்திடினும் நத்திக்கிடந்திட இசையாதீர்! வாய்மைதனைக் காத்திடும் வன்மைதனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந் தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம். இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அரு மரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம். ஏறுநடை போட்டிடுக! ஏற்றமிகு நிலையதனை இந்நாடு பெற்றிடவே உமதாற்றல் பயன்பட்டிடும் என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறி நிற்கின்றார்கள்; காண இயலவில்லை, கேட்கின்றோம் அவ்வுரையை

பாண்டி நாடதற்குப் பாங்களித்த மாமதுரை, தமிழ் மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை, தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச்செய்த திருமதுரை. வீரப் போராற்றலால் மட்டுமின்றி, அறிவுக்கணை தொடுத்த மாண்பினாலும், பெருமைதனைப் பெற்ற வெற்றிக்கோட்டம். 'அந்த நாளும் வந்திடாதோ!' என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலைபெறுவர் மாமதுரைப்பதியின்வரலாற்றுச் சிறப்பறியின். ஆம்! ஆயின், ஏக்கம் நமக்கெதற்கு? அந்நாட் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம், எந்நாளும் அச் சிறப்பு இருந்

(13-ம் பக்கம் பார்க்க)

# “இந்தி”யா? “இந்தியா”வா?

[ எஸ். ஆர். ]

வியாதியைப் போக்குவதற்காக மேற்கொள்ளும் மருந்து தவருனதாக இருந்துவிட்டால் பிணியைப் போக்குவதற்குப் பதிலாக மனிதர்களைப் பிணமாக்கிவிடுவதும் உண்டு.

மார்க்கமே முடிவாக இருந்துவிடக்கூடாது. இலக்கினை எட்டுவதற்கு உரிய ஒரு சாதனம்தான் ‘வழி’ என்பது.

மத்திய அரசிலுள்ள பல முக்கிய மனிதர்களுக்கு ‘இலக்கு’ முக்கியமாகத் தெரியவில்லை. இலக்கினை அடைவதற்குறிய மார்க்கமே பிரதானமாகத் தெரிகிறது.

‘இந்தியா’வை உருவாக்குவதற்காக ‘இந்தி’யை ஒரு மருந்தாக மேற்கொள்வதில் தீவிரமாகின்றனர். நாளுக்கு நாள் மருந்து வியாதியைப் போக்குவதற்குப் பதில் உயிரையே கொல்வதுபோல் ‘இந்தி’யே இந்தியாவை அழித்துவிடும்போல் தெரிவதை அனைவரும் உணருகின்றனர்.

இந்திரா இங்கு வந்து சென்றபோது மாணவர்களைச் சந்தித்த நிகழ்ச்சியும் சரி—மொழித் திணிப்பு உணர்வின் உச்சகட்டத்தில் மொரார்ஜிதேசாய் தமிழக அமைச்சர் மாதவனே மேற்கொண்ட சூடான கருத்து மோதலின்போதும் சரி “புதுடில்லி வாலாக்கள்” இந்தியாவை விலைகூறியேனும் இந்தியைத் திணிக்க முயலுகிருர்கள் என்ற உண்மையைத்தான் காட்டுகிறது.

இந்திமொழி பேசாதவர்கள் இந்தியா ஒற்றுமையுடன் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுவதற்கும் இந்திமொழி பேசுபவர்கள் இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்க நினைக்கும் போக்கு அடிப்படையில் வேறுபாடு தெரிவது அன்ருட நிகழ்ச்சிகள் மூலம் புலனுகிறது.

மொழிச்சிக்கல்தான் என்றிருந்தாலும் நாட்டை சிதறவைக்கப் போகிறது என்று அரசியல் பற்றற்றவர்களும் நெடுநாட்களாகக் கூறி வருவதை வலிந்து சென்று உறுதிப்படுத்தும் வகையில் மத்திய அரசின் பல பெரும்புள்ளிகள் ‘இந்தித் திணிப்பு, எந்த விலை கொடுத்தேனும்” என்ற முழக்கத்தில் இறங்கியிருக்கின்றனர்.

இந்திதான் தேசிய மொழி அல்லது இணைப்பு மொழி என்பதற்கு இதுநாள் வரை சொல்லி வந்த ஏதேதோ காரணங்களெல்லாம் இப்போது பின்னுக்குத் தள்ளப்பட்டு

“இந்தியாவுக்காக இந்தி”

என்ற புது உத்தி கையாளப்படுகிறது.

இந்தியாவில் தமிழ்நாடு மட்டும்தான் இருக்கிறதென்று நினைக்க வேண்டாம் என்று இந்திரா சென்னை விமான நிலையத்தில் கூறியதும்;

தமிழக அமைச்சர் மாதவனுடன் மேற்கொண்ட விளக்கு வாதத்தில் இந்தியாவைவிட வேறெந்த மாநிலமும் பெரியதல்ல என்று மொரார்ஜி தேசாய் தெரிவித்திருப்பதும் முறையே பிரதமரும் துணைப் பிரதமரும் மொழிக்கொள்கையில் மட்டுமல்லாது இந்திய அரசியலமைப்பினையும் எப்படி கண்களை மூடிக்கொண்டு அணுகுகின்றனர் என்பதைத்தான் புலப்படுத்துகிறது.

இந்தி மொழிதான் இணைப்பு மொழி என்பதை வலியுறுத்த விரும்பும் மொரார்ஜிதேசாயிக்கு—

பல மாநிலங்கள் அல்ல — பல மொழி கொண்ட மாநிலங்கள் கொண்ட கூட்டாட்சித் தத்துவம்தான் இந்தியாவின் மொத்த உருவம் என்பது இத்தனை ஆண்டுகளாக மத்திய அமைச்சர் பதவிவகித்த பின்னரும் தெரியாமல் இருப்பது வியப்புக்குரியதே!

ஒருவேளை அவர் நேராகவே புதுடில்லி சென்றவராக இருந்தால்கூட தெரிந்திருக்க நியாயமில்லை என்று தெளியலாம். ஆனல் பம்பாயில் அமைச்சராக இருந்துவிட்டு பின்னரே புதுடில்லி செல்ல நேர்ந்த தேசாயுக்கு மாநிலங்கள் சேர்ந்ததுதான் இந்தியா; இதில் எது பெரியது எது சிறியது என்ற பிரச்சனையை எழுப்புவதே கூட்டாட்சித் தத்துவத்தைக் கேலிக்குரியதாக்குகிறது என்பது புரியாமல் ஏன் போனது என்பது நமக்குப் புரியவில்லை.

தேசாயின் பாணியிலேயேதான் பிரதமர் இந்திராவும்.

‘இந்தியாவில் தமிழ்நாடு மட்டுமில்லை—ஏனைய பகுதிகளும் இருக்கின்றன”

என்று எல்லாவற்றையும் படித்த மாணவர்களுக்கு மீனம்பாக்கத்தில் உபதேசம் செய்துவிட்டுச் சென்ருர்.

இந்தியாவில் தமிழ் நாடு மட்டுமல்லாமல் எத்தனையோ ‘தமிழ் நாடுகள்’ இருப்பதனுல்தான் இந்தி மட்டுமே’ என்ற கொள்கை மொழிப் பிரச்சனைக்கும் அப்பால் சென்று பார்த்தால்கூட எவ்வித சாத்தியக் கூறும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை என்பதனை இந்திரா இன்னும் உணராதது அவருடைய தவறுதானே தவிர எவருடைய தவறும் இல்லை.

‘இந்தி மட்டுமே; எந்த நிலையிலும், எந்த விலையிலும்’ என்ற போக்குக்கு உத்திரப் பிரதேசத்தில் அமைச்சர் ஒருவருக்கும் இந்திய ரிசர்வ் பாங்கியின்லக்னே கிளைக்கும் நடந்துவரும் ‘மொழிப் போர்’ ஒரு அனைத்திந்திய உதாரணமாகத் திகழ்கிறது.

தனது இலாகாவின் கடிதம் ஒன்றின் ஆங்கில மொழி பெயர்ப்பினையும் சேர்த்து அனுப்பினுல் தான் செய்தி என்ன என்பதனைக் கவனிக்க இயலும் என்று கூறிய ரிசர்வ் பாங்கியின் லக்னே கிளையுடன் ‘அப்படியா சேதி? இந்தியில் மட்டுமே எழுதுவேன்; இது அரசின் உரிமை’ என்று எதிர்ப்புச் சவால் கொடுத்திருக்கிருர் அமைச்சர் ராம் சுவரூப் சர்மா.

மொழித் துறையில் மற்ருெரு அருவருக்கத்தக்க நிகழ்ச்சியொன்று புதுடில்லிப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்துள்ளது.

அங்கே உள்ள தென்மொழிப் பேராசிரியர்கள் ஏதும் தெரியாத இந்தி வாலாக்களிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அதிகார பூர்வமாகக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இந்தி மொழி ஒன்றை மட்டுமே தெரிந்துவைத்திருக்கிருர்கள் என்ற காரணத்துக்காக அந்த ‘ஏதும் அறியாதவர்’களிடம் இத்தனை வயதான பின்னர் எங்களைப் பாடம் கேட்டுக்கொள்ள வைப்பது தனிப்பட்ட வகையில் இழிவுபடுத்துவதாக இருக்கிறது.

ஆங்கிலத்தின் மீதுள்ள பொருளில்லாத வெறுப்பும் இந்தி மொழியின்பால் அவர்கள் கொண்டிருக்கும் ஏற்றுக்கொள்ள முடியாத ‘வெறி’

# சட்டம், ஒழுங்கு—காமராசர்

கௌதமன்

மூன்றுகிழமைகளுக்குமுன் நடந்து முடிந்த சுதந்திரதினக் கூட்டத்தில் காமராசர் தேர்தலுக்குப் பிறகு அவர் அறிவித்திருந்தபடி முதன்முறையாகப்பேசினார். ஆனால் நாம் எதிர்பார்த்ததற்கு மாறாகப் பேசியுள்ளார். அவரது பாணியும் தரமும் முன்புபோல்தான் இருக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்! பாணி அப்படியேதான் இருந்தது; ஏனென்றால் அது அவரால் திருத்திக்கொள்ள முடியாத ஒன்று. ஆனால் தரம்! அது முன்பைவிட பல படிகள் கீழே இறங்கிவிட்டிருந்தது. அவர் பேசுவதற்குத் தேர்ந்தெடுத்ததினம் மிகப் பொருத்தமானதாய் இருந்தது. தி மு. க-வினர் சுதந்திரதினத்தன்று 'புரட்சியும், புதுமையும் இல்லாத செயலான' படி அரிசித் திட்டத்தை சென்னையில் சுற்றுப்புறங்களில் நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டு, பிறகு அங்கங்கே 'விடுதலை நாள்' விழாவினைக் கொண்டாடினர். ஆனால் அதே நேரத்தில் சுதந்திரத்தின் மொத்த வாரிசுகள், சுதந்திர தின வீரர் வலம் ஆரம்பித்து அதை 'முரசொலி' அலுவலகத்தின் முன்னே விமரிசையாகக் கொண்டாடிவிட்டுப்பெரியவரின் பேச்சைக் கேட்பதற்குப் பெருமளவில்வந்து குவிந்தனர்.

காமராசர் பேச ஆரம்பித்தார். கையொலி கடலொலியை அமைதியில் ஆழ்த்திவிட்டது. "தமிழ் நாட்டில் தி. மு. க-வினர் ஆட்சிக்கு வந்த பிறகு சட்டம், ஒழுங்கு. அமைதி காக்கப்படவில்லை" இது அவரது திருவாய் மொழிகள். இந்த நேரத்தில் அரசியல் அறிஞர்கள் கருத்துப்படி சட்டம், ஒழு கு எந்த எந்த நேரத்தில் காக்கப்படவில்லை என்று கூறுகின்றனர் என்று பார்ப்போம், 'எப்பொழுது ஒரு ஆட்சி. நாட்டில் உண்டாகும் கலவரத்தையோ, குழப்பத்தையோ அடக்கி அமைதி ஏற்படுத்த முடியாமல், கண்டும் காணாத நிலையில் உள்ளதோ அப்பொழுது சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படவில்லை என்று கூறலாம்.''

மேற்கூறிய கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் காமராசரின் தத்துவப்படி, காலித்தனம், கல்லெறிதல், தெருச் சண்டை ஆகியவைகள் எங்கெங்கு நடக்கிறதோ அங்கெல்லாம் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை என்று பொருள், இதன்மூலம் நாம் பெறவேண்டிய பாடம் மேற்கூறிய நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடக்கிறதோ அங்கெல்லாம் சட்டமும் ஒழுங்கும பாதுகாக்கப்படவில்லை என்பது, உலகத்தின் எந்தப் பகுதியிலும் இதுபோன்ற சிறு நிகழ்ச்சிகள் நடக்காமல் இருப்பதில்லை. அதனால் காமராசரின் தத்துவப்படி சட்டமும் ஒழுங்கும். உலகத்தில் எங்கும் பாதுகாக்கப்படவில்லை வேடிக்கையான வேதனை! கேட்டுக்கொண்டிருந்தவர்கள் வாயைத் திறக்காமல் இருந்தனர். காரணம் அவர்கள் 'பெரியவரிடம்' கேட்ப் பாடம் பெற வந்திருந்தவர்கள்.

பம்பாயில் 'சிவசேனை'வின் கலவரம்; ஆனால் அங்கே சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படுகிறது. பிரதம மந்திரியின் வீட்டிமுன் உண்ணாவிரதம்; ஆனால் அங்கே அமைதிக்கு அழிவில்லை. நாட்டில் பல மாநிலங்களில் 'நக்சல் பாரிகள்,' 'கேரோக்கள்' ஆனால் அங்கெல்லாம் அமைதியான நிலை, தமிழ் நாட்டில் மட்டுந்தான் அமைதியற்ற நிலை. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் காமராசர் கருத்துத் தெரிவிக்கமாட்டார். ஏனென்றால் அங்கெல்லாம் காங்கிரசார் ஆட்சி. மக்கள் அவ்வளவு விரைவிலா தமிழ் நாட்டின் முந்தைய ஆட்சியைப்பற்றி மறந்துவிடுவார்கள். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கலவரத்தை அடக்க இராணுவத்தையல்லவா வரவழைத்தார். அப்பொழுதெல்லாம் சட்டத் க்கும் அமைதிக்கும் அணு அளவும் பங்கம் ஏற்படவில்லை; இப்பொழுதான் திடீரென்று முளைத்து விட்டது.

இதன் மூலம் காமராசரும், அவரது காலாட்படையினரும் பெற நினைக்கும் அரசியல் லாபம், இது போன்ற அமளி நிலை தமிழ் நாட்டில் உருவாகிவிட்டது; எனவே சட்டத்தையும் அமைதி ஏற்படுத்த மத்திய அரசாங்கம் தலையிட்டு ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரவேண்டும் என்பதுதான், சொல்முறையாக காமராசரது 'குறி' சரியாக இருந்தாலும் அதற்காக அவர் பயன்படுத்தும் குறுக்கு வழி சரியில்லை என்பதை உணர்த்த விரும்புகிறோம். மேலும் இது போன்ற தத்துவ விளக்கங்களை காமராசரிடமிருந்து நமது நேரத்தைக் கழிப்பதற்காக எதிர்பார்க்கிறோம்.

---

யையும்தான் இந்த இரு செய்திகளும் எடுத்துக் காட்டுகின்றன.

ஏறக்குறைய இதே பாணியில்தான் இந்திரா விமான நிலையத்திலும், மொரார்ஜி மாதவன் முன்னிலையிலும் கடைப்பிடித்திருக்கின்றனர்.

மொழி வெறியில் திளைக்கும் தனி மனிதர்கள்—அமைப்புகளைப் போலத்தான் பொறுப்பில் இருக்கும் முதல் இரண்டுமுக்கியமானவர்களும் இருக்கின்றனர்.

இந்தப் போக்குக்கு சென்னையில் மாணவர்களும் புதுடில்லியில் மாதவனும் உரியபதிலை அந்தந்தநிகழ்ச்சிகளின்போதே தந்திருக்கின்றனர்.

'இந்தியாவைப் பாருங்கள்; இந்தியைப் பார்க்க வேண்டாம்.'

என்று மாணவர்கள் சுருக்கமாகக் கூறியிருப்பதனையும்

'இந்தியா ஒன்றாக இருக்கவேண்டுமென்று நீங்கள் கூறும் அதே காரணத்துக்காகத்தான் ஆங்கிலம் வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம்.'

என்று மாதவன் தந்த விளக்கத்தினையும் முறையே இந்திராவும் மொரார்ஜியும் தங்களது சீரிய சிந்தனைக்கு மேற்கொள்வது நல்லது.

'இந்தியாவில் உள்ள எல்லா பகுதியினரும் த கள் மொழி கலாச்சாரம் பண்பாடு ஆகியனவற்றுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்ற உளமாற உணரும்போதுதான் தேசிய ஒருமைப்பாடு இயற்கையாக உறுதிப்படும்.'

என்று இப்பிரச்சனை பற்றி தமிழக முதலமைச்சர் கோவைக் கல்லூரி மாணவர்களிடையே தெரிவித்திருக்கும் கருத்துக்கும் காங்கிரசின் முக்கியஸ்தர்களின் போக்குக்கும் நீண்ட இடைவெளி இருக்கிறது.

[ இலக்கியக் கதை ]

# அவன், மகனே தோழி!

[ மதுரை. தங்கராசு ]

தான் வளர்ந்ததோடல்லாது தன் இனத்தின் புகழையும் இம் மண்ணகத்தில் நிலைக்கச்செய்து விண்ணினும் உயர்புகழ்கொண்டது நம் செந்தமிழ் என்று கூறின் அது மிகையன்று. இத்தகு பீடுடைய மொழிதனைக் கொண்டுள்ள நாம் அதனைப் பெற என்ன தவம் செய்தோமோ?......எவர் அறிவார்?

இத்தகைப் புகழினத்தின் (தமிழினத்தின்) பெருவாழ்வு மக்களினத்தின் நாகரிகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கி வந்துள்ளதை வரலாற்று ஏடுகள் உலகுக்குப் பறைசாற்றிக்கொண் ள்ளன.

அகம், புறம் என்னும் இருபெரும் வாழ்க்கைத் துறைகளிலும் சீர்பெற்றிலங்கியது 'தமிழ்நாடு' என்பதை உலகறியும். அன்பும் இனிய பண்பும் இணைந்த வாழ்வு நாகரிக வாழ்வின் அடித்தளம் என்பதைத் தமிழர் அன்று அறிந்திருந்தனர். அதனடிப்படையில் நம் மூத்தோரின் வாழ்வியல் அமைந்திருந்ததில் வியப்பில்லை, எனினும் நாகரிகத்தின் தோற்றுவாயாக நம்மவர் இருந்திருக்கின்றனர் என்றெண்ணும்போது உள்ளபடியே உள்ளம் இறும்பூதெய்துகின்றது.

இத்தகு புகழ் மண்ணின் மடிமீது தவழ்ந்து விளையாடி அமிழ்தச் சுவையுண்ட எனக்கு அகத்துறை நூல் ஒன்று காட்டிய காட்சியை நீங்களும் காணுதல்வேண்டும் என்ற அவா மேலிட்டால் அதனை ஈண்டு உரைத்திட உள கொண்டேன். கேட்டிடுக!

அன்பும் அறிவும் அமையப்பெற்ற கன்னியொருத்தியும் பண்பும் ஆண்மையும் வாய்க்கப்பெற்ற ஆண்மகன் ஒருவனும் ஒருவரைஒருவர் ஒருநாள் கண்டுகொள்கின்றனர்.

இருவர் கண்களும் கலந்து பேசத் தொடங்கின. அவ்வாறு அவர்கள் பேசிய பேச்சுக்களின் பொருளை அவர்கள் இருவரைத் தவிர மற்றவர் அறிதல் இயலாத மொழியில் பேசிக்கொண்டனர். அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவள் அவனைப் பார்க்காததைப்போலப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள். அவளின் இதழ்கள் துடித்தன, அவனுடன் பேசிட. ஆனால் பெண்மைக்கே மகுடமாக உள்ள அச்சங் கலந்த நாணம் அவளை அவ்வேளை ஊமையாக்கிவிட்டது! அவள் நிலையுணர்ந்த அவனும் பேசா நிலையினனானான்.

பிரியா விடைபெற்றுச் சென்றுவிட்டாள், அப்பேரழகி. 'வெம்மை' கலந்த மூச்சொன்றை வெளியிட்டவாறே வழி நடக்கலானான். அவ் வாண்மகன்! நாட்கள் நகர்ந்தன. காளையைக் காணவும் கருத்தின்பம், காதலின்பம் பெறவும் அப்பெண் மனம் விழைந்தது.

ஆனால், அவன்......?

கடமையை உயிராகக் கொண்டு வாழத் தலைப்பட்டு நிற்கும் பெருமகன். ஆண்மைக்குரிய இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும் தன்மைகொண்டவன். அவளைக் கண்டு அகங்களிக்க அவனும் அவாக்கொண்டான். அது தவறல்ல. பருவம் அவனை அந்நிலைபெறச் செய்துவிட்டது. காலம் கனியும் காலத்தைக் காளையவன் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தான்!

- அவள் நிலை......!

எழில் விளையும் மாந்தளிர் மேனியாள் தீந்தமிழ் மொழிக்குரியாள், கார்மேகத்தைப் பொருமை கொள்ளச் செய்யும் கறுத்து, வளர்ந்த, நீண்ட எழில் குழலாள். ஒளி முகங் காட்டும் முழுமதியிலும் சிறிது கறையுண்டு. ஆனால், அவள் முகத்திலோ குறையோ கறையோ இல்லாப் பால்முக நிறையழகி, துன்பம் என்பதே இன்னதென்றறியா வாலைக் குமரி.

இத்தகு சிறப்புகளைக் கொண்டவளின் 'பொன்மேனி' தன் ஒளி இழந்தாற்போன்ற நிலையினைக் காட்சியாக ஆக்கிக்கொண்டிருந்தது.

கண்களில் புத்துணர்ச்சி இல்லை. உள்ளம் மகிழாச் சிரிப்பு உதட்டில் வெளிப்பட்டது. அனைத்துப் பொருட்கள்மீதும் வேண்டாவெறுப்பு ஆண்டுத் தோன்றியவண்ணம் இருந்தது. அவளின் செக்கச்சிவந்த விழிகள், அவள் உறக்கம் கொள்ளவில்லை என்பதை உணர்த்தாமல் உணர்த்திக்கொண்டிருந்தன. உணவுசெல்லவில்லை என்பதைப் பணி (இனிய, உயர்ந்த) மொழியாளின் பாலுடல் வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. உள்ளம் அமைதியற்ற நிலைபெற்றபின் உடலுக்குப் புத்துணர்ச்சி ஏது? என்பதைத் தளிர்க்கொடியாளின் தங்கநிகர் 'ஒளியிழந்த' மேனி சொல்லிக்கொண்டிருந்தது.

தன் உள்ளம் கவர் கள்வனைக் கன்னியவள் உரிமைகொள்ளத் துடித்தாள். எத்தனையோபேர் கூடியிருக்க அவர்களையெல்லாம் ஒன்றும் அறியாதவர்கள்; காணாதவர்கள் என்று ஆக்கி அத்தனை பேர்களின் கண்களையும் மறைத்தது. 'ஏதிலார்போலப் பொது நோக்கு'' நோக்கி அவனும் அவளும் மகிழ்ந்த நாட்களை எல்லாம் எண்ணிஎண்ணி அக்காதல் மலராளின் மனம் வருந்திக்கொண்டே இருந்தது. மீண்டும் அவனைக் காணும் வழியும் வாய்ப்பும் என்று தோன்றுகின்றனவோ அன்றுதான் தன் வாழ்வில் இன்ப ஒளிதோன்றும் என்று எண்ணினாள். ஆனால், காலம் கடந்து சென்றுகொண்டிருந்ததேயன்றி, அவளின் அருங்கனவு 'அரும்பு'வதற்கான வழி தோன்றாமைகண்டு மீளாத் துயருற்றாள்.

தண்மைதரும் தன்மைசால் வெண்ணிலவும் வெம்மை தருவதாக அப்பெண்மை எண்ணிற்று. குளிர்ந்த இளம் மென்காற்றும் துன்பம் தருவதாகவே அவள் கருதினாள்.

மற்றவரிடம் தன் ஆற்றா நிலைதனைக் கூறித் தேற்றிக்கொள்ளலாம் என்று சொல்லத்தக்க நிலையுமல்ல அவளின் மனநிலை. அகத்துறை உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள முடிந்தாலும் பிறரின் மனத்திற்கு உணர்த்திக்காட்டும் உணர்ச்சிகளல்லவே அவளின் உள்ளக் கிடக்கை? பின் கவலைகொள்ளாமல் களிப்பினை அடைதல் யாங்ஙனம்?

இதனைப் பெற்றவள் கண்ணுற்ருள். தன் மகளின் மாறுபட்ட—வேறுபட்டநிலை உணர்ந்தாள். கவலை எனும் பனிப்படலத்தையே கண்டறியாத தன் மகள் கவலை என்னும் 'பெருமலை' இந்த நிலையில் தான் இருக்கும் என்பதனைத் தன்னுடலின் துயர்மூலம் காட்டிக் கொண்டிருப்பதைக்கண்டு அவள் மனம் துன்பச் சுழலில் சிக்குண்டு தவித்தது. தேன் கலந்த நல்லாவின் பாலினைவிடத் தன் மகளின் வாயிதழ்கள் தரும் சொற்சுவையை அவளால் சின்ஞட்களாகப் பெறமுடியவில்லை.

ஒரே மகள், உயிருக்குயிராக வளர்க்கப்பட்டுவரும் அறிவுத் திருமகள், அழகுப் பெருமகள்.. அவள் இப்பொழுது களையிழந்து தன்நிலை மறந்து தலைகவிழ்ந்து இருப்பதன் காரணத்தைப் பெற்றெடுத்த தாய் மனம் பற்றிக்கொள்ளப் பேரவாக் கொண்டது.

ஆனுல் அவள் அதனை எவ்வாறு அறிதல் கூடும்?

தாய், மகளை அணுகி உன்நிலைக்கு—மாற்றத்திற்குக் காரணம் என்ன என்று பன்முறை வினவினள். அதற்கு 'ஒன்றுமில்லை' என்ற 'பொருளுள்ள' சொல்லைத்தவிர மான்விழியாளின் வாயிதழ்கள் வேறு தேன் துளிகளைச் சிந்தில!

சிந்தனைகொண்டாள், தாய். தன் மகளை வருத்தவந்தவினை (செயல், தன்மை நிலை) எது என்றறிய ஏக்கம்கொண்டாள்எதைக் கேட்டாலும் 'ஒன்றுமில்லை' என்றுரைக்கும் பொருள் நிறை சொல்லின் பொருளை உணராத தாயுள்ளம் சிறிதுவேதனை கொள்ளத்தான் செய்தது.

எனவே, தன் மகளின் தோழியை அழைத்து அவளிடம் கேட்டால் ஒருவேளை அவளாவது அதன் காரணத்தைக் கூறக்கூடும் என்று எண்ணித் தோழியைக் கேட்டாள். அவளுக்குத் தலைவியின் உண்மை நிலை முழுவதும் தெரியும். ஏனெனில் தலைவியின் உள்ளத்தைக் கவர்ந்து சென்றவனைத் தலைவியோடு இருக்கும்போதே தோழியும் கண்டிருந்தாள். எனவே, அவள் அனைத்தும் அறிவாள். அறிந்திருந்தும் அதனை அவள் பிறரறியச் சொன்ஞளில்லை. அவர்களாகத் தலைவியின் நிலையறியட்டும் என்றிருந்து விட்டாள். ஆனுல், இப்பொழுது நிலைமை 'நுனிக் கொம்பேறி விட்டது' இனியும் வளர்த்தல் அழகல்ல; அறிவு என்று எண்ணிஞள். ஆகவே நிகழ்ந்து முடிந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் தெரிந்திருந்தாலும் ஏதோ சில அறிவேன்; பிறவற்றை நீங்களே அறிந்துகொள்க! என்று தோழி, தலைவியின் தாயிடம் கூறிஞள்.

அவள் (தோழி) சொல்கிருள்: அன்ஞய்! (தாயே) அன்ருெரு நாள் மனம் இவர் மணம் நிறை மலர்கள் செறிந்த மலைச்சாரலுக்கு எம் தோழியரோடு வேங்கை மலர் கொய்து வரச்சென்ருேம். வேங்கை மரத்தின் கீழே நின்றுகொண்டு 'புலி புலி எனும் பூசல்' செய்யின் (வேங்கை) மலர்க் கொம்பு வளைந்து கொடுக்கும் என்ற நம் பண்டைய மரபு வழி அவ்வொலியை எழுப்பினேம். எம் மெல்லிய ஒலியைப் போரொலியாகக் கொண்டு எம்மை நோக்கி வேங்கைப் (புலி) வந்துவிட்டதோ என்று எண்ணி செங்கழுநீர் மலர்களாலான மாலையணிந்து தன் மார்பெல்லாம் செஞ்சாந்து பூசி வில்லும் அம்பும் ஏந்தி ஓடிவந்தான், ஒரு மறவன். ஆண்டு (அங்கே) புலி இல்லாமை கண்டு அது சென்ற வழி எது என எம்மிடம் கேட்டான். இதற்கிடையில் நாங்கள் அனைவரும் (மலர் கொய்ய வந்தோர்) ஒரே ஆளாகக் காட்சியளித்தோம். வியப்படைய வேண்டாம். இயற்கையிலேயே எழக்கூடிய அச்சங் கலந்த நாணம் எங்களை அம்மறவனைக் கண்டதும் ஒருவர் பின் ஒருவராக மறைந்து ஒடுங்கி நிற்கும்படி செய்துவிட்டது.

அவன் எங்களைப் பார்த்து, 'மடவீர்! நும் வாய்ப்பொய்யும் உளவோ?' என வியப்புடன் கேட்டுத் தான் வந்த வழியே செல்வதற்கு முன்பாக, 'நின் மகள் உண்கண் பன்மாண் நோக்கி,' அதன் பின் சென்றனன். தலைவியும் அவனும் பார்வையால் பேசிக்கொண்ட மொழியை இப்பாவையால் உணர முடியவில்லை. ஆனுல் நின் மகள் அவன் சென்றதே எம் (திசை) நோக்கி 'அவன் மகனே தோழி!' என்று கூறிஞள். இந்நிகழ்ச்சிக்குப் பிறகே தலைவி நலிந்து மெலிந்து காணப்படுகிருள். இதனைத் தவிர வேறு யாது காரணமோ யான் அறியேன். அவள் சொல்லின் பொருளை உணர்வோர் உண்மை கண்டு தெளியலாம் என்று தலைவியின் தாய்க்குத் தோழியானவள் குறிப்புணர்த்தியுள்ளமை ஈண்டு சிறப்புள்ளதாக அமைகின்றது.

'புலி புலி' என்று ஒலியெழுப்பியதைச் செவியுற்று வில்லேந்தி வந்த மறவனைக் கண்டு உள்ளம் களிப்புற்ற தலைவி அவன் மகனே -ஆண்மை நிறைந்த வீரனே- என்று விளித்து அவனின் ஆண்மைக் குணத்துடன் கூடிய அன்பு அவளை ஆட்கொண்ட காரணத்தால்தான் உள்ளத்தை அவனுக்கே உரிமையாக்கிவிட்டாள் என்பதைத் தலைவி தோழியிடம் கூறிய 'அவன், மகனே தோழி' என்னும் தொடர் விளக்குகின்றது.

இங்ஙனம் மனம் ஒன்றிய ஈருள்ளங்களை மணம் முடித்து வைத்தல் வேண்டும் என்றும் இதனைப் பிறர் கூறி அறிவுறுத்துவதற்கு முன் பெற்ருேர் அறிதல் வேண்டும் என்பதையும் இப்பாடல் நமக்குப் பாடம் புகட்டுகின்றது.

அத்துடன், தலைவியின் மனநிலை எத்தகைய எண்ணவலைக்குள் சிக்குண்டு தவித்தது (தலைவி தலைவன்) மணம் முடித்து வைக்கத் தோழியின் குறிப்புணர்ந்தாற்றும் தொண்டுஎன்றும் பாராட்டிற்குரியது. பெற்றவர் மனமோ (மற்றவர்

(12-ம் பக்கம் பார்க்க)


விரைவில்!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

# 'கண்ணாத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

# முடிவு காண்போம்!

—சட்ட அமைச்சர் எஸ். மாதவன்—

இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் அவர்களுடைய தொடக்க உரையுடன் தொடங்கிய சட்ட அமைச்சர்கள் மாநாடு, மத்திய சட்ட அமைச்சர் திரு. பனம்பள்ளி கோவிந்தமேனன் அவர்களுடைய சில நியாயமான— ஏற்றுத் தீரவேண்டிய சட்டச் சிக்கல்களைக்கூட எடுத்தெறிந்துவிட்டு தன் 'வெறி'த்தனத்தைக் காட்டிக் கொள்வதாயமைந்திருந்தது என்பதில் ஐயமில்லை.

துணைக் கண்டத்தையே 'ஒரு விநாடி' திகைக்க வைக்கத்தக்க 'நிகழ்ச்சிகள்' நடைபெற்றுவிட்டன.

மத்திய சட்ட அமைச்சர் அவர்கள், சட்டங்களை மொழி பெயர்ப்பதிலும், சுப்ரீம்கோர்ட் நடவடிக்கைகளை இந்தியில் மாற்றுவதிலும் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும், சட்டச் சிக்கல்களையும் எடுத்து விளக்கிக்கொண்டு வரும்போதே அந்த விளக்கங்களை திரு. மொரார்ஜி அவர்களால் பொறுமையாகக் கேட்டுக்கொள்ள முடியவில்லை. ஏற்கெனவே அவரது இதயத்தை முழுமையாக நிரப்பிக்கொண்ட 'இந்தி வெறி' குறுக்கிட்டது.

அந்தக் குறுக்கீடு மூலம்தான்' மாநாடு 'உச்சகட்டத்தை'யும்எட்டியது!

திரு. மொரார்ஜி அவர்களுக்கும், மத்திய அமைச்சரவைக்கும் திடமான ஒரு நம்பிக்கை இருக்கிறது. அதாவது இந்தி வருகையின் மூலம், இந்தி பேசாதார், சிறப்பாகத் தமிழ் நாட்டார் மத்திய அரசில் வேலை வாய்ப்புக்களை இழக்கக்கூடும்; வேலை வாய்ப்புக்களை இழக்கத் தேவை இராது என்ற அளவில்—விஷயங்களைத் தெளிவாக்கி விட்டால் அல்லது, ஏற்பாடுகளைச் செய்துவிட்டால் — இந்தி எதிர்ப்புக்கு இடமிருக்காது; அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்' — என்ற கருத்திலே அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்; நம்பிக்கொண்டிருக்கிறார்கள்! இந்த நம்பிக்கை பொய்யானதாகும்!

இந்தியை நுழைப்பதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் 'எவ்வளவுசெலவானாலும் பரவாயில்லை' — என்று திரு. மொரார்ஜி கூறுவது, இந்தித் திணிப்பில் அவர் எவ்வளவு தீவிரம் காட்டுகிறார் என்பதை எடுத்துக் காட்டுவதாகவேஇருக்கிறது!

இந்தப் பிரச்னையில் தமிழ் நாட்டுக் காங்கிரசாரின் இருதலைப் பாம்பு வேடம் நகைக்கத் தக்கதேயாகும்.

'இந்தியைத் திணிக்கவில்லை' என்று மக்களிடம் கூறி அவர்களை நம்பும்படியாகப் பேசுவதும், இந்தியைப் படித்தே தீரவேண்டும் என்று இன்னொருபுறம் கூறுவதும், மக்கள் இந்தியை விரும்புகிறார்கள் என்று, மத்திய அரசிடம் தெரிவிப்பதுமான போக்கு—நல்லதொரு நாகரிக அரசியலாக இருக்க முடியாது.

டெல்லி மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பின், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்:—

"ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்துக்கு இருக்கின்ற எதிர்ப்புக்களையும் அலட்சியப்படுத்தி விட முடியாது."

—என்று கூறி இருப்பதனைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

இதுநாள் வரையில் இச்சட்டத் திருத்தம்பற்றி வேறுவிதமாக வியாக்கியானம் செய்து வந்த பிரதமர்



அவர்கள் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான், முதன் முறையாக "திருத்தச் சட்டத்துக்கு இருக்கின்ற எதிர்ப்பினைப்பற்றிப் பேசி இருக்கிறார்கள்!

இதிலிருந்து அவர்களுக்குஇந்தித் திணிப்பில் ஒரு துணிவும் உறுதியும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாகவேண்டும்.

மற்றொன்று, இம்மாநாடு மூலம் நமக்குத் தெளிவாகத் தெரிவது, இதுநாள் வரையில் காங்கிரசார் "இந்தியைத் திணிக்கவில்லை; இஷ்டத்துக்கே விடுகிறோம்" என்றுகூறி வந்ததற்கு முரணாக இந்தியை மறைமுக வழியானாலும் நேர்முக வழியானாலும் திணித்தே' தீர்வது என்று முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்பதாகும்!

எனவே, இந்த இந்தி விவகாரத்தில் ஒரு தெளிவானமுடிவு உடனே தெரிந்தாக வேண்டும்.

இந்தி உண்டா? இல்லையா?

ஆங்கிலம் நீடிக்குமா? நீடிக்காதா?

என்பதில் விரைவில் ஒரு முடிவு கண்டாக வேண்டும்!

இணைப்பு மொழி என்று இந்திக்குப் பெயரிடுவது ஏற்றுக்கொள்ளப் படமுடியாததாகும்.

வெளி நாடுகளுக்கானாலும்சரி, மலேயா சிங்கப்பூர், கொழும்பு போன்ற நாடுகளுக்கானாலும், வடக்கே ஆனாலும்கூட இங்கிருந்து அங்கு போவோரும் அங்கிருந்து இங்கு வருவோருமாக மிகக் குறைந்த அளவினர்தான் இருக்க முடியும். இந்த அளவின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடவும் முடியும்.

இத்தகையோர், தாங்கள் சென்றிருந்து தொழில்புரியும் நாட்டின் மொழியை, நாளாவட்டத்தில் கற்றுக்கொள்ளவே செய்கின்றனர். கற்றுக்கொள்ளவும் முடியும்;தாமாகவே! இஷ்டபூர்வமாகவே!!

இதற்காக, இணைப்பு மொழி என்று பெயரிட்டு, இங்குள்ள நாலரை கோடிப்பேரும் இந்தியைக் கற்கவேண்டும் என்பதில் நியாயம் ஏதும் இல்லை; முறைகேடான செயலும் ஆகும்.

"எல்லா மாநிலங்களும் இந்தியை ஏற்றுக்கொண்டுவிட்டன" என்று திரு மொரார்ஜி கூறும்போது, நான் குறுக்கிட்டுப் பதிலுரைத்ததும் அவருக்கு ஆத்திரம்தான் வந்தது! ஆத்திரத்தோடுதான் கேட்டார்! ஆத்திரத்தோடுதான் பேசினார்! ஆத்திரத்தோடுதான் ராஜினாமா செய்துவிடுங்கள் என்றும் கூறினார்!

ஒரு மத்திய அமைச்சர், அதுவும் துணைப்பிரதமர் அந்தஸ்திலிருப்பவர் இந்த அளவுக்கு உணர்ச்சிவசப்பட்டுப் பேசியது கண்டிக்கத்தக்கது தான்! ராஜினாமா செய்யும்படிக் கோர அவருக்கு அதிகாரமுமில்லை— உரிமையும் இல்லை!

( 11-ம் பக்கம் பார்க்க )




3—18

## அந்த ஆளை தெரியுமா?

'ஆமாம் அரசே நான்தான் ஒற்றர் நாயகம்!' என்று தூமகேது புருவங்களை உயர்த்திச் சொன்னான்.

'ஒற்றர் நாயகமே! ஏது தாங்கள் கோபமாக இருக்கிறீர்கள் போலிருக்கிறதே?'

'கோபமாகவா? இல்லையே அரசே? இலங்கை அரசர் தங்களுக்கு அனுப்பியிருக்கும் இந்த யானைத்தந்தம், பொற்கயிறு சந்தனப் பேழை, முத்து, மாணிக்கம் இவற்றைப் பார்த்துப் பரவசமல்லவா அடைகிறேன்!'

'உண்மையாகவா? ஆனால் தங்கள் முகத்தைப் பார்த்தால், அப்படித் தெரியவில்லையே?' என்று எதிரிலிருப்பவனின் கோபத்தை இன்னும் அதிகமாக்கும் விதத்தில் குலசேகரன் கேட்டுவிட்டு, அங்கே இருந்த ஓர் சாய்வு ஆசனத்தில் சாய்ந்து படுத்துக் கால்களை நீட்டிக் கொண்டான்.

'வந்துவிட்டது குலசேகரனுக்குத் தைரியம்! இல்லாவிட்டால் என்னைக் கேலி செய்யும் முறையில் பேசுவானா? நாம் கோபமாகப் பேசினால், அவனும் கோபமாகப் பேச ஆரம்பித்துவிட்டால்?..........நிலைமையை இதற்குள்ளாக — சோழ மன்னரிடமிருந்து அனுமதி கிடைப்பதற்குள்ளாக—மோசமாக்கிக்கொள்ளக் கூடாது! நான் எதிர்பார்த்தது, நடந்துவிட்டிருக்கிறது! பராக்கிரமபாகுவிற்கும் இவனுக்கும் இடையே ஏதோ ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது! அந்த ஒப்பந்தத்தை அமுலாக்கும் முதல்கட்டம்தான் என்னை அலட்சியப்படுத்துவது! இப்பொழுது நான் ஆத்திரத்தைக் கொட்டி, என் நிலையைத் தாழ்த்திக் கொள்வதைவிட சாகசமாக நடந்து கொள்வதுதான் நல்லது!' என்று தூமகேது சிந்தித்து வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்டு பாண்டியன் சாய்ந்து படுத்திருந்த ஆசனத்தின் அருகே வந்து நின்றான்.

'இந்தப் பரிசுப் பொருள்களை எல்லாம் பார்த்து, நான் பரவசமடைகிறேன் என்று சொல்வது வெற்று வார்த்தை அல்ல அரசே' எந்தப் பராக்கிரமபாகு தங்களைச் சிறையில் அடைத்துப் பூட்டி, தலையைவெட்டி கோட்டை வாயிலில் வைப்பேன் என்று குதித்தானோ — கொக்கரித்தானோ — அதே பராக்கிரமபாகு இன்று பணிந்து பரிசுப் பொருள்கள் அனுப்புகிறான் என்றால் இதைவிடப் பூரிப்பான நிகழ்ச்சி என் வாழ்க்கையில் வேறு என்ன இருக்க முடியும், அரசே? களம் அமைப்பேன், கத்தியை வீசுவேன் என்று வான்முட்ட குரல் எழுப்பியவன், வந்து விழுந்து விட்டான் பாதத்தில் என்றால் என் இதயம் கூத்தாடுவதை எந்த வார்த்தைகளால் தங்களுக்கு எடுத்துரைப்பேன் வேந்தே! எனக்குத் தெரியும்—நன்றாகத் தெரியும்—இந்த இலங்கை ரசன் இன்று இல்லாவிட்டாலும் ஒருநாள் தங்கள்காலில் விழுந்து காணிக்கை செலுத்துவான் என்று! எதிர்பார்த்தது நடந்துவிட்டது — எக்களிப்பு அடைகிறேன்! அந்த எக்களிப்பில் பேசினால், தாங்கள் ஏதோ தவறாக எண்ணிக்கொள்கிறீர்களே!' என்று தூமகேது சொல்லியதைக் கேட்டு குலசேகரன் சிரித்தான்.

'ஏன் சிரிக்கிறீர்கள்?'

'இல்லை ஒற்றர் நாயகமே, அந்தப் பராக்கிரமபாகு எவ்வளவு எகிறிக் குதித்தான்—கடைசியில் இப்படியா என் காலில் விழவேண்டும் என்று நினைத்தேன், சிரிப்பு வந்து விட்டது!'

'பாய்ந்துவரும் புலி, தீப்பந்தத்தைக் கண்டதும் அஞ்சி நடுங்கி பின்னடைவதைப்போல, பராக்கிரமபாகு தங்களதுதோள் வலிமையைக் கண்டதும் நடுநடுங்கிப் போய்விட்டான்!......

'அந்த நடுக்கத்தின் விளைவுதான் நம் எதிரே இருக்கும் இந்தப் பரிசுப் பொருள்கள்.'

இவ்வாறு சொல்லிவிட்டுக் குலசேகரன் திரும்பவும் சிரித்தான்.

அவனுக்கு நன்றாகத் தெரியும்—தூமகேது உள்ளத்தில் கொந்தளிக்கும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு சாகசத்தோடு பேசுகிறான் என்பது. பாண்டியனும் அதே வழியைத்தான் பின்பற்றினான். பிரத்தியேக அதிகாரம் தனக்குச் சோழ மன்னனிடமிருந்து கிடைக்கும்வரை, வெளிப்படையாகத் தன் ஆத்திரத்தைக் கக்கக்கூடாது என்பது தூமகேதுவின் திட்டம். திருமேனியை மணக்கும்வரை தூமகேதுவைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பது குலசேகரனின் எண்ணம்.

'ஒற்றர்நாயகமே! இந்தப் பரிசுப் பொருள்களை நான் திருப்பி அனுப்பி விட்டிருப்பேன்!......'

'தாங்கள் அப்படி எங்கு செய்துவிடுகிறீர்களோ என்று தான் செய்தியைக் கேள்விப்பட்டதும் நான் பயந்துபோனேன்! அனுப்பியகாணிக்கையைச் சரி என்று ஏற்றுக்கொண்டதுதான் நல்லது அரசே, நல்லது!'

நல்லதோ கெட்டதோ அதைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன் என்பது உமக்குத் தெரியும்! என்னைச் சிறையில் அடைத்து, அவமானப்படுத்திய அந்தப் பராக்கிரமபாகுவைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்! இன்று அவன் அனுப்பிய இந்தப் பரிசை ஏற்றுக்கொண்டதினால் அந்தப் பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன் என்று நினைத்துவிடாதீர்! திருமேனியை அடையவேண்டும் என்பதற்காக நானே அவனோடு சாகச நட்புக் கொள்ளவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில், அவனே வலிய எனது நட்பை விரும்புவதாகத் தூது அனுப்பியிருக்கிறான்! எப்படியாவது நான் திருமேனியை மணந்துகொண்டாக வேண்டும் — இல்லாவிட்டால் என் வாழ்வு பாலைவனமாகிவிடும்! அந்த அழகரசியை

மனைவியாக அடையும்வரை அவள் தந்தையோடு நான் பகைத்துக் கொள்ளக்கூடாது! பாருங்கள் ஒற்றர்நாயகமே திருமணம் முடிந்ததும் —அந்த அயோக்கியனை இதே மதுரையின் சிறையில் அடைக்கிறேனா இல்லையா என்று!'

தந்தைக்காக நமது அரசியார் கண்ணீர் விட்டால்?

உனக்குத் தந்தை வேண்டுமா அல்லது கணவன் வேண்டுமா என்ற ஒரே கேள்வி போதுமே அவள் வாயை மூடிக்கொள்ள!

'ஆகா சரியான வழி!'

கோட்டை வாயிலிலிருந்த இலங்கைத் தளபதிகளின் தலைகளை நான் எடுத்துவிடச் சொன்னதற்காக, மக்கள் என்னைப்பற்றித் தவறாகப் பேசிக்கொண்டதாகவும்கேள்விப்பட்டேன். திருமேனிமீது கொண்ட காதலினால், பராக்கிரமபாகுவிடம் நேசம் கொண்டுவிட்டதாகவும் அதனால் தான் இலங்கைத் தளபதிகளின் தலைகளை அப்புறப்படுத்தி விட்டதாகவும், இன்னும் சில நாட்களில் சைவத்தை உதறித்தள்ளிவிட்டுப் பௌத்தத்தை ஏற்றுக்கொள்ளப் போவதாகவும் சில முட்டாள்கள் பேசிக் கொண்டார்களாம்! அரசியல் நுணுக்கம்தெரியாத அப்பாவிகள் ஆனதினால் அவர்களின் பேச்சை நான் பொருட்படுத்தவில்லை! நீங்கள் என்னைத் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டீர்கள் என்ற ஒரே தைரியத்தால்தான் நான் ஒருவர் சொல்லுக்கும் பயப்படுவதில்லை!'

'அறிவுத் தெளிவற்ற அந்த அப்பாவி மனிதர்களின் பேச்சைத் தள்ளுங்கள், அரசே! தாங்கள் யார், எத்தகைய குணங் கொண்டவர் என்பதை நன்றாக அறிந்தவன் நான்! சைவத்தின் நன்மைக்காகத் தாங்கள் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள்! ஆளவந்தாரின் அருமை மகன் சோலையப்பன் சைவத்திற்கு வைரியானான் என்பதினால், அவனுக்குத் தூக்குத் தண்டனை தந்த தங்கள் தைரியத்தையும்—சைவப் பற்றையும் —நான் மறந்தாலும் என் நெஞ்சு மறக்காது அரசே, என் நெஞ்சு மறக்காது!'

'ஆளவந்தாரின் மகன் சோலையப்பனை மட்டுமல்ல — என் ஆருயிர் காதலி திருமேனி சைவத்திற்கு விரோதியாக எழுந்தாள் என்று கேள்விப்பட்டால், அவளையும் தூக்குமேடையில் நிறுத்தத் தயங்கமாட்டேன்! என் உயிருக்குயிரான மகன் விக்கிரமன், சைவத்தை எதிர்த்தால் அவனைத் தண்டிக்கவும் நான் பின்வாங்கமாட்டேன்!'

'இதெல்லாம் எனக்குத் தெரியாதா, அரசே!'

'இன்னொரு முக்கியமான செய்தி, ஒற்றர் நாயகமே!' என்று சொல்லிக்கொண்டே, குலசேகரன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'என்ன?'

'அஞ்சலையை உங்களுக்குத் தெரியுமா?'

இந்தக் கேள்வி தூமகேதுவை ஒருகணம் திக்கு முக்காடச் செய்து விட்டது. உடனே அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு எந்த அஞ்சலை?' என்று ஒன்றும் தெரியாதவனைப் போலக் கேட்டான்.

பொன்னையா நினைவு இருக்கிறது அல்லவா?'

'தங்கள்மீது வேல் எறிந்தானே, அந்தப் பொன்னையாவா?'

ஆமாம்!

'அவனையா நான் மறப்பேன் — நன்றாக நினைவிருக்கிறது!'

'அவனுக்கு ஒரு தங்கை!'

அப்படியா!'

'அவள் பெயர்தான் அஞ்சலை!'

'ஓகோ, இந்நாள்வரை எனக்குத் தெரியாதே!'

'அவள் நல்ல அழகி — பேச்சில் மிகுந்த கெட்டிக்காரி—துடுக்கிலோ அண்ணனையும் மிஞ்சிவிடுவாள்!'

'அவள் உமக்கு நன்றாக அறிமுகமோ?'

'புத்தபுரத்தில் அவளைப் பார்த்தேன்!'

'அப்படியா?'

'இப்பொழுது அவள் நமக்கு புதிய விரோதியாக முளைத்திருக்கிறாள்!'

'எப்படி?'

'அவள் அண்ணனைக் கொன்ற நம்மீது பழிக்குப் பழி வாங்கப் போகிறாளாம்!'

'பேதைப் பெண், ஏதோ சோகத்தில் அப்படி உளறியிருப்பாள்! ஒரு பெண்ணால் என்ன செய்யமுடியும்?'

இதென்ன ஒற்றர்நாயகமே, இவ்வளவு சுலபமாக ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லிவிட்டீர்கள்? ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்ற பழமொழியை தங்களுக்கு நினைவுபடுத்தவேண்டுமா என்ன? ஒரு பெண் நினைத்தால் இந்த உலகத்தையே சுக்கு நூறாகச் சிதறும்படிச் செய்யமுடியும்! அஞ்சலை சாதாரண பெண் அல்லள்......''

'பொன்னையாவின் தங்கை அல்லவா கொஞ்சம் துடுக்காக இருந்தாலும் இருப்பாள், நீங்கள் சொல்லியபடி''

''அவள் இந்தப் பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துவரப்போகிறாளாம் ஒற்றர் நாயகமே!''

'என்ன?''

''படை எடுத்துவரப்போகிறாளாம்!''

' அஞ்சலையா? படைஎடுத் வரப் போகிறாளா?'' என்று தூமகேது கலகலவென்று சிரித்தான்.

---

9- பக்கத் தொடர்ச்சி

''சமஸ்கிருதம் போன்ற பிறமொழிகளின் நுழைவால் அன்றைய தூய தமிழ், தன் தனித்தன்மை கெட்டுவிட்டது; பின்னர் ஆங்கிலத்தின் நுழைவால் மேலும் தமிழ் கெட்டது; இப்போது மீண்டும் இந்தி நுழையுமானால், இன்னும் தமிழ் கெடும்; இன்னுமொருமுறை தமிழ் கெட நாங்கள் அனுமதிக்கமாட்டோம்; அனுமதிக்க முடியாது''

என்று தெளிவாகவே திரு. மொரார்ஜியிடம் எடுத்துக் கூறினேன்! என்றாலும் அவர் மொரார்ஜியாகவே தான் காணப்பட்டார்!

அப்படிப்பட்ட உள்ளத்தோடு அவர் இருக்கிற அதே வேளையில் தான், கொஞ்சநஞ்சம் நம்பிக்கை வைத்துக்கொள்ளத்தக்கவராயிருந்த பிரதமரும் ' சட்டத் திருத்தத்துக்கு இருக்கின்ற எதிர்ப்புகளை அலட்சியப்படுத்திவிட முடியாது'' என்றும் பேசி இருக்கிறார்.

எனவே, சட்டத் திருத்தம் வந்தாலும், அது தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் அச்ச உணர்வினை அகற்றுவதாக இராது! ஒரு கண் துடைப்பு முறையாகவே அது இருக்கும்.

எனவேதான் மீண்டும் என் கருத்தை வலியுறுத்துகிறேன்:

இந்தி உண்டா? இல்லையா? ஆங்கிலம் நீடிக்குமா நீடிக்காதா? என்பதற்கு உடனே விரைந்து ஒரு முடிவு கண்டாக வேண்டும். அதுதான் இப்போது நம்முன் உள்ள முக்கியப் பிரச்னை!

●

'சிரிக்காதீர்கள் ஒற்றர்நாயகமே, சிந்தனைக்கு வேலை தரவேண்டிய செய்தி இது. அஞ்சலை இப்பொழுது எங்கு இருக்கிருள் தெரியுமா?' என்று குலசேகரன் கேட்டதும் 'எங்கே இருக்கிருள்?' என்று துடிதுடிப்போடு தூமகேது வினவினுன்.

'சேரநாட்டில் இருக்கிருள்!''

''அங்கே என்ன செய்கிருள்?''

'படை திரட்டுகிருள்!''

''நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?''

''சேரநாட்டு இளவரசன்...''

''கனகசேனன்!''

''ஆமாம், அவனைத் தன் அழகு வலையில் விழும்படி அவள் செய்துவிட்டாள்!''

''சாகசக்காரி?'' என்று தூமகேது தன்னையும் அறியாமல் பற்களை நற நற வென்று கடித்தான்.

''அதிக ஆத்திரம் கொள்கிறீர்கள் போலிருக்கிறதே!''

''ஆத்திரமா? இப்பொழுது அவள் என் எதிரில் இருந்தால் என்ன செய்வேன் தெரியுமா? அவள் கழுத்தைஒரேஅழுத்தாக அழுத்திப் பிணமாக்கிவிடமாட்டேனு! நீங்கள் அஞ்சியதின் அர்த்தம் இப்பொழுது தானே அரசே. எனக்குப் புரிகிறது! கனகசேனன் ஒரு பைத்தியக்காரன்! அவள் என்ன சொல்கிருளோ அப்படியே ஆடுவான்!''

''அவளைத்தான் அவன் திருமணம் செய்துகொள்ளப்போகிருனும்!''

''திருமணமா?''

''நீங்கள் எதற்காக இப்படித் திகைக்கிறீர்கள்?''

''திருமணம் நடந்துவிட்டால், அதன் பிறகு அவள் சபதத்தைச் சுலபமாக நிறைவேற்றிவிடுவாளே?'

''எதையோ நினைத்துக்கொண்டு, நீங்கள் எதையோ பேசுகிறீர்கள், ஒற்றர்நாயகமே சேரநாட்டான் இன்றும் நமது பகைவன்தானே? அவனுல் நம்மை என்ன செய்ய முடியும்?''

''நீங்கள்தானே முதலில்...''

''பயந்து பேசவில்லை நான்—புதிய புதிய பகைகள் எந்தெந்த உருவங்களில் எழுகின்றன என்று சொல்ல வந்தேன்! அஞ்சலை யார்? பராரியான பொன்னையாவின் தங்கை! அந்தப் பராரிப் பெண் பட்டத்தரசியாகப்போகிருள்!',

''பட்டத்தரசியாகப்போகிருளா?'

'அஞ்சலை பட்டத்தரசியாகப் போவதில் சந்தேகமே இல்லை ஒற்றர் நாயகமே! அந்த அளவிற்கு அவர்களின் காதல் முற்றிவிட்டதாம்! அரண்மனையிலேயே அவர்கள் இருப்பதில்லையாமே! எந்நேரம் பார்த்தாலும், காட்டிலும் சோலையிலும் விளையாடிக்கொண்டே இருக்கிருர்களாம்!''

''சாகசக்காரிதான்அவள், இல்லாவிட்டால் ஒரு நாட்டின் அரசியாக வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு உண்டாகியிருக்குமா?''

'எப்படியோ பாவம், அவள் நன்ருக இருந்தால் சரி!''

''அந்த அரக்கியிடமா இரக்கங் காட்டுகிறீர்கள்?''

'அவள் பெண்தானே!''

''சரி, நான் வருகிறேன்!'' என்று எதையோ நினைத்துக்கொண்டவனைப்போலத் திடீரென்று தூமகேது வெளியில் சென்றுவிட்டான்.

''அஞ்சலை பட்டத்தரசியாகப் போவதில் சந்தேகமே இல்லை ஒற்றர் நாயகமே! அந்த அளவிற்கு அவர்களின் காதல் முற்றிவிட்டதாம்; அரண்மனையிலேயே அவர்கள் இருப்பதில்லையாமே! எந்நேரம் பார்த்தாலும், காட்டிலும் சோலையிலும் விளையாடிக்கொண்டே இருக்கிருர்களாம்!'' என்று அரசன் சொன்ன வார்த்தைகள், சாலையில் சென்றுகொண்டிருந்த தூமகேதுவின் காதில் வந்து ஒலித்தன.

''ஆமாம், அதுதான் சரியான வழி!'' என்று அவன் தனக்குத் தானே முணுமுணுத்துக்கொண்டு வேகமாக நடந்தான்.

[வளரும்]

---

8-ம் பக்கத் தொடர்ச்சி

மனமோ)துயர் கொள்ளாத் தன்மையில் தோழியின் செயல் இருத்தல் வேண்டும் என்பதையும் இதன் வழி கண்டு தெளியலாம்.

இத்தன்மைபோல் இலை மறைக் கனிகளாக நம் நாட்டின் இலக்கியப் பெருங்கனிகள் பலவுள. அவற்றை எடுத்துக் கருத்துச் சுவையும் தமிழ்ச் சுவையும் பெறுதல் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட, நாம் ஆற்ற வேண்டிய தலையாய கடமை என்பதை எவரும் மறுத்தல் முடியாது.

தவிர இத்தகு இன்சுவை தரும் இனிய நூல் யாதென்பதைக் கூருமல் இருத்தல் கூடாதல்லவா? ஆதலின், அந்நூலின் பெயரையும் அப்பாடலையும் கீழே காண்க!

''அன்னய் வாழிவேண்டு
அன்னை! நின்மகள்
பாலும் உண்ணுள்
பழங்கண் கொண்டு
நனிபசந் தனள்என
வினவுதி; அதன் திறம்
யானும் தெற்றென
உணரேன் மேனுள்,
மலிபூஞ் சாரல் என்
தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை
கொய்குவம் சென்றுழிப்
புலிபுலி என்னும்
பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க்
கண்போல் ஆயிதழ்
ஊசிபோகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய
செச்சைக் கண்ணியன்
குயம்மண்டு ஆகம்
செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன்
ஒருகணை தெரிந்துகொண்டு
''யாதோ மற்று அம்
மாதிறம்படர்,'' என
வினவி நிற்றந்
தோனே; அவற்கண்டு
எம்முள் எம்முள்
மெய்மறைபு ஒடுங்கி
நாணி நின்றனெ
ஆகம் பேணி
''மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ?
என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த
தேரன் எதிர்மறுத்து
நின்மகள் உண்கண்
பன்மாண் நோக்கிச்
சென்றேன் மன்றஅக்
குன்று கிழ வோனே
பகல்மாய் அந்திப்
படுசுடர் அமையத்து
அவன் மறை தேஎம்
நோக்கி மற்று'' அவன்,
மகனே, தோழி!'' என்றனள்;
அதன் அளவு உண்டுகோள்
மதிவல் லோர்க்கே.''

—(அகநானூறு)

4-ம் பக்கத் தொடர்ச்சி

திடச் செய்திடலாம், இவரெல்லாம் அதற்கே தமை ஒப்படைத்துள்ளார்கள், இவர் ஆற்றல் துணைகொண்டு தமிழ் மரபும் தமிழ் மாண்பும் என்றும் ஒளிமயமாய்த் திகழ்ந்திடச் செய்திடலாம் என்றோர் உறுதியினைப் பெறுகின்றேன்; பெறுகின்றார்; பெற்றிடச் செய்கின்றீர், பெரும் புலவர்களாம் நீவிர். பட்டமளிப்பு விழாவினிலே பாங்குடனே வந்துள்ள அறிவரசராம் நீவிர்; உமக்கென்ன உரைத்திட உளது? உம் உள்ளம் அஃதறியும், உமது பெரும்பேராசிரியர் கருத்து அளித்துள்ளார்; என் கடன் நீரறிந்ததனைமீண்டும் நினைவுபடுத்துவதேயாகும்.

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின், இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி?

தான் உண்ட நீரதனை, பன்மடங்கு பெருக்கி பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம்.

தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ!

தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயோ அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக்கொள்கின்றாள்?—இல்லை — மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம்பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு—பொற்குவியல்—புள்ளிக் கலாப மயில்—கார்மேகம்—நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள் இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு. நாட்டின் பொதுவுடைமை, நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர். எனினும் எடுத்துரைக்க வந்துள்ளேன், இயம்புகின்றேன்.

எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல் இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில் அந்நாட்டினில் தொடர் தொடராய், அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திடவேண்டும்; நன்று இது, இது தீது; நமதிது, பிறர் தந்ததிது; மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திடவேண்டும்; அதற்கான பயிற்சிக்கூடம் வேறெதுவாய் இருந்திட முடியும்? இஃதே அப்பயிற்சிக்கூடம், பல்கலைக் கழகம்; நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக் கோட்டம்.

1964—66ஆம் ஆண்டுத் தேசியக் கல்விக் குழுவினர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர், எவருக்கும் கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல் சிந்தித்து உண்மை அறிந்து அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து, ஆளடிமையாகாமல், அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம்—என்ற கருத்துப்பட அக் குழுவினர் கூறியுள்ளனர்.

ஆய்ந்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும்; இன்றேல் சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம்—என்றுரைக்கின்றார்—எச்சரித்திருக்கின்றார் பெர்ட்ராண்டு ரசல் எனும் பெருமகனார்.

ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச் சென்றார்கள் இவைபோன்ற ஏற்றமிகு நல்லுரைகள் பற்பலவற்றை. இடையில் அவை மறந்தோம்; அல்லலுற்றோம்; இன்று அவனியின் பிற பகுதிகளிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார்; நமக்குண்டு அந்தக் கருவூலம் நெடுங்காலமாக என்பதனை உணர்கின்றோம்; நாம் தமிழர் என்பதனை அறிகின்றோம்; நானிலம் அதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதி கொள்கின்றோம்.

பட்டம் பெற்றிடும் இத் திருநாள் உவகை பெற்றிடும் விழா நாள். ஐயமென்ன? ஆயினும், உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று உறுதி கொண்டிடவும் உள்ளதோர் நன்னாள். நாட்டைக் காத்திடும் நல்ல பணிக்கு நம்மை நாமே ஒப்படைக்கின்றோம் என்பதனை உணரும் நாளே இந்நாள்.

மதுரைப் பல்கலைக் கழகம் ஓராண்டுப் பருவத்திலுள்ளது.

நூற்றாண்டு விழா நடாத்தி முடித்திட்ட பல்கலைக் கழகங்கள் உள்ளன—நம் நாட்டில்.

பத்தோடு பதினொன்று என்ற முறையினிலே அமைந்ததன்று மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழரின் தனித் தேவை ஒன்றினைக் கருத்திற் கொண்டு துவக்கப்பட்டதாகும் மதுரைப் பல்கலைக் கழகம்.

நூறு ஆண்டுகட்கு முன்னம் பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டபோது, நாடு தன்னரசு இழந்து, தலை கவிழ்ந்து இருந்தது. மக்கள் மனம் வெதும்பிக் கிடந்தனர்; பல்வேறு துறைகளிலே சீர்குலைவு; எங்கும் அறியாமை மட்டுமன்று, இந்நாட்டினர் ஏதும் அறிந்திட வல்லர் அல்லர் என்ற எண்ணம் கப்பிக்கொண்டிருந்த நிலை. இங்கு எவரும் இதற்கு முன்னம் நினைத்துப் பார்த்திருக்க முடியாத அறிவுக் கலைகளை மேனாட்டார் வகுத்தளிக்கின்றார் என்ற உணர்வு மேலோங்கிய நிலையுடன் பல்கலைக் கழகம் நுழைந்தனர். அற்றைய நாட்களில் பயிற்சி தந்திட முனைந்தோரும் பரிதாப உணர்வுடனே பாடம் கற்பிக்க முற்பட்டனர். பிற நாட்டில் என்னென்ன கண்டனர் என்ற வியப்பு உணர்ச்சிக்கே முதலிடம்; நம் நாடு ஏதேது அறிந்திருந்தது என்பது பற்றிய கேள்விக்கு ஒதுக்கிடம்!

இந்நிலையில் வளர்ந்தன பழம் பெரும் பல்கலைக் கழகங்கள்—ஆண்டான் அடிமைகட்கு, அன்பு காரணமாக, அறிவு வழங்கிடவும் வேலைக்கு ஏற்ற ஆட்கள் பெற்றிடவும் அமைத்திட்ட இடங்கள் என்று அவை கருதப்பட்டன.

அவற்றினிலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்ற அறிவாளரில் மிகப் பலரும், நடையாலும், உடையாலும்

நாட்டத்தாலும், பிறந்த நாட்டில் வாழுகின்ற வேற்று நாட்டு வடிவங்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர்; அதிலே பெருமகிழ்வும் கண்டனர். நெடுங்காலம் இந்நிலை! இன்று அஃது பழங்கதை!!

மதுரைப் பல்கலைக் கழகம், அடிமைத் தளை அறுத்து, ஆளுதற்கு உரிமையும் தகுதியும் பெற்றோம் நாம் என்ற முழக்கமிட்டு விழித்தெழுந்த மக்கள் உலா வந்திடும் நாட்களிலே அமைந்துளது.

'ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!' என்ற பாரதியின் வீர அழைப்புக் கேட்டு, அணி அணியாய் வீரர்கள் திரண்டு வந்தனர்; பிறகு எழுந்தது இந்தப் பல்கலைக் கழகம்.

நாட்டுக்கு விடுதலை கிடைத்திட்டது மட்டுமன்று, மனத் தளைகள் மெல்ல மெல்ல அறுபட்டிடும் நிலையையும் நாம் கண்டோம்; அந்தச் சூழ்நிலையிலேயே இப் பல்கலைக் கழகம் கண்டோம்; சிந்தனை நமது உரிமை என்ற குறிக்கோளுக்கான கோட்டம் இஃது என்பதனை உணர்கின்றோம்.

எல்லாம் பிற நாடுகளிலே உள. நம் நாட்டிலே ஏதும் இல்லை என்ற பிச்சை மனப்பான்மை செத்தொழிந்து, எமக்கு ஈந்திடுக! என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத்தக்க, ஏற்புடைய எண்ணக் குவியல் எம்மிடம் உண்டு; அது மாசு படிந்த மணி போல மங்கியதோர் ஓவியம் போல உளது; மாசு துடைத்திடுவோம். மணி ஒளியைக் காட்டிடுவோம் என்று எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கி உள்ள காலம் இது; அதனைச் செவிலித்தாயாகப் பெற்றுளது இம் மதலை—மதுரைப் பல்கலைக் கழகம்.

எனவே, இதற்கென்று ஒரு தனித்தன்மை. இதற்காக ஒரு தனிப் பாதை இருத்தல் வேண்டும். இந்தப் பல்கலைக் கழகம், தமிழகத்துக் கருத்துக் கருவூலந் தன்னை உலகு காணுதற்கான வழி வகுக்கும் கோட்டமாகி, புலி பொறித்தான், கயல் பொறித்தான், ஆரியப் படை கடந்தான், கங்கை கொண்டான், கடாரம் வென்றான் என்றெல்லாம் புல்லரிக்கும் வரலாற்றினைப் படிக்கின்றோமே, அதற்கு ஒப்ப, குறளளித்தார், மேகலை ஒளி தந்தார், அகமும் புறமும் அறிவித்தார் என்று அவனியிலுள்ள நாடுகளில் வித்தகர் மெச்சிடத்தக்க, புது வரலாறு சமைத்திடுதல் வேண்டும்; அதற்கேற்ற அணிவகுப்பைத் திரட்டிடுதல் இந்தப் பல்கலைக் கழகத்தின் தனித் திறனாய் அமைந்திடுதல் வேண்டும். பாட முறை பயிற்சி முறை, தேர்வு முறை எல்லாமே இந்தத் தனி நோக்கம் கொண்டிடுதல் மிக நன்று. உரியவர்கள் இதுபற்றி ஆய்ந்தறிதல் வேண்டும். விருப்பம் உரைக்கின்றேன், வடிவம் கொடுத்திடும் பொறுப்பில் உள்ளோர் செய்திடுவர் எனும் ஆர்வம் கொண்டு.

அச்சம் தவிர்த்தல், ஆய்ந்தறிதல், நாட்டு நிலை உயர்த்தல், பிற நாடுகட்கு நம் தனிச் செல்வம் ஈது எனக் காட்டிடல், அளித்திடல், இவை எமது பணி என்று கூறிடுவீர். இந்நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம் பெற்றுள்ள பட்டங்கள் என்பதனைச் சொல்லாலும் செயலாலும் காட்டிட வாரீர் எனக் கனிவுடன் அழைக்கின்றேன்.

இவை ஏட்டில் படித்திட இனிப்பவை; விளக்கிப் பேசிட ஏற்றவை; வியந்து கூறிடத் தக்கவை. ஆனால், நடைமுறைக்குக் கொண்டுவருதல் எளிதன்று; தொடர்ந்து கடைப்பிடித்தல் அரிது. அதற்குத் தளராத உறுதியும், மங்காத ஊக்கமும், ஓயாத உழைப்பும், சீரான நோக்கமும், தன்னல மறுப்பும் மிகமிகத் தேவை. பல்கலைக் கழகம், இந்தப் பண்பினைத் தந்திடும்; தந்துளது என்று எண்ணுகிறேன். ஆம்! என்று உமது சீரிய பணியின்மூலம் மெய்ப்பிக்க வேண்டுகின்றேன்.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை, இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ நமது உடைமை என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டிடின், விட்டு வைத்திடாமல், அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்.

அவர் கூறியுள்ளார், ஆகவே அஃது அறிவுடையதாகவே இருந்திடுதல் வேண்டும்—என்று எண்ணி இருந்திடாமல், அவர் உரைத்தது இஃது என்பதற்கு முதலிடம் தாராமல், உரைத்துளது யாது என்பதற்கே முதலிடம் தந்து, உண்மையெனில், உயிர் கொடுத்தேனும் காத்திடுவோம், அன்று எனில் உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கிடுவோம் என்று முழக்கமிட்டு அறிவுத்துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்.

இந்நாட்டுத் தேள், எனின் கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிற நாட்டுத் தேன், எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்?

எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின் எமதாக்கிக்கொள்வோம் என்ற நோக்கம் தேவை; அதனைத் தந்திடவும் அதன்மூலம் பயன் கண்டிடவும் முனைந்து பணியாற்றிடவேண்டும்.

பல்கலைக் கழகங்கள் வளர்ந்துள்ளன; வளருகின்றன; கல்விக் கூடங்கள் பெருகி வருகின்றன; எனினும் இன்றும் மக்கள் தொகையுடன், பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனை

## பாட்டுத் தலைவரடா!

நாட்டினை ஆள்பவர் நல்லவர் போற்றிடும்
பாட்டுத் தலைவரடா!—தமிழ்
நாட்டுத் தலைவரடா!—மக்கள்
வாட்டம் அறிந்துடன் வாழ்வு உயர்த்திடும்
வீட்டுத் தலைவரடா!
ஆலை அரசர்கள் ஆட்டம் அடங்கிடும்
வேளை பிறந்ததடா!—நல்ல துன்ப
காலம் பறந்ததடா!—கூலி
வேலை புரிபவர் வேதனை போக்கிடும்
காலம் பிறந்ததடா!
ஆடம் பரத்தினில் ஆட்சி புரிந்தவர்
ஆட்டம் முடிந்ததடா!—அவர்
வேடம் கலைந்ததடா!—தமிழ்
நாடு செழித்திட நாளும் உழைப்பவர்
கூட்டம் நிறைந்ததடா!
எங்கும் தமிழெனும் எல்லாம் தமிழெனும்
சங்கும் ஒலித்ததடா!—தமிழ்ச்
சங்கம் நிலைக்குதடா!—இந்த
சிங்கத் தமிழ்மகன் செய்யும் செயல்களால்
அங்கம் குளிருதடா!

—புலவர். மணிமுடிச் சோழன்.

சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவேதான், நாட்டு நிலை உயர்த்திட, நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கின்றனர். நீவிர், இந்நாட்டைச் சூழ்ந்துள்ள இல்லாமை போதாமை, அறியாமை, கயமை என்னும் பகையினை வீழ்த்திடப் புறப்படும் முன்னணிப் படையினர். பட்டந்தனைக் காட்டிப் பாங்கான வாழ்வு பெற முந்திக்கொள்ளும் நிலையினர் என்ற நிந்தனையை நீக்கிடுக! நீள்வெற்றி பெற்றிடுக! என வாழ்த்துகின்றேன்.

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலைகுலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே மனக் குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலாம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்.

நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம், கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்துவிட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நான், நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம், நம்பிக்கை இழந்துவிடவில்லை; மாருக, அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு ஏதும் இல்லை; அவர்முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப்படாததாலும், அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர் என்பதனைக் காண நேரிடுவதாலும், அவர்கள் இயல்பு திரிந்துவிடுகிறது; நேர்வழி அடைபடுகிறது; கேடு தரும் முறைகள் இனிப்பளிக்கின்றன என்று கருதுகிறேன்.

எனவே, இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் இருந்திடவேண்டுமெனில், மற்றையோர், தமது சொல்லும் செயலும் பொது நலனுக்கு உகந்ததாக அமைந்திடுமாறு பார்த்துக்கொள்வது இன்றைய அவசரத் தேவை என்பதனைக் கூறிட விழைகிறேன்.

அதேபோது, மாணவர்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமைமிக்கது என்பதனை உணர்ந்து, அதற்கேற்பத் தமது செயலினை வகுத்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தத்தையின் கழுத்திலே பூட்டிடவோ, கத்தும் கடல் மூழ்கி முத்து எடுப்பர்? தனக்கென வந்துள்ள தையல் அன்றோ அதற்கு உரியாள்?

அறைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம், அடுப்பு எரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட; எனக்கென்ன தருகின்றனர், ஏன் இந்தத் தாமதம் என்ற கணை தொடுக்க மட்டுந்தானோ? எவரும் அதுபோல் கூறுர்.

உம்மிடம் மிகுதியான நம்பிக்கை கொண்டுள்ளோரில் நானும் ஒருவன். புதியதோர் உலகு செய்வோம் — என்று பாடிச் சென்ற பாவலர் உம் போன்ருேரை மனத்திற்கொண்டே பாடினுர். உம்மிடமன்றி வேறு எவரிடம், தூய தொண்டாற்றும் திறனை எதிர்பார்க்க முடியும்?

குறிக்கோள் தெளிவாக அமைந்திடின் மாணவர்களிடம் மாண்புமிகு செயலினை எதிர்பார்க்க முடியும் என்றுரைத்தேன். இந்தக் குறிக்கோளை மாணவர் பெற்றிடத்தக்க விதத்தில், பாடத் திட்டமும், பயிற்சி முறையும், பழகு முறையும், கல்விக்கூடங்களில் அமைந்திடவேண்டும்.

கல்விக்கூடங்களில் எண்ணிக்கை பெருகி அரசுகளின் வருவாய்த்துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில் கல்விக்கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்கவேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக உள்ளது. படிப்படியாக, இந் நிலையினைச் செம்மைப்படுத்த அரசு முனைந்து பணியாற்றி வருகின்றது. ஆண்டு பல ஆகக் கூடும், அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திட முடிவதற்கு. அதற்கே பெரும் பொருள் ஈந்திடவேண்டியுள்ளது. அதவும் எந் நிலையில் இப்பொருளைப் பெறுகின்ருேம், தருகின்ருேம் என்பதனை எண்ணிப் பார்த்திடவேண்டும்.

முழு வயிறு காணுதார், முதுகெலும்பு முரியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணுர் வலியோரின் பகடைக்காய்கள், ஓடப்பர்—இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடி மரமாய், பாதையாய், பகட்டுக்களாய், ஆமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

[ அடுத்த இதழில் முடியும் ]

3-ம் பக்கத் தொடர்ச்சி

---

மேதை ஒரு கருத்தைக் கூறி—அதன்மீது தன் பதவி விலகலையும் சமர்ப்பிக்கிருர் என்ருலே, பிரச்னை 'சூடானது' என்பது புரியும்.

திரு. சாக்ளா அவர்களைப் போன்றே ஆங்கிலம் பற்றிய கருத்தை அகத்தடக்கிக் கொண்டிருப்போர், இன்னமும் பலர் அமைச்சரவையில் இருந்துகொண்டிருக்கக்கூடும். மனச் சான்றைக் கொன்று கொண்டு, தம் பதவியினைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணி இயங்குவதைக் காட்டிலும், நாட்டின் எதிர்கால நலனையும், இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமையையும் மட்டுமே 'பொதுநன்மை'யாகக் கருதி, இந்தச் சந்தர்ப்பத்தில் பதவி விலகவேண்டும்.

இப்படிப்பட்ட 'விலகல்கள்' மூலம் 'பதவி விலகி விடுவதுதானே?' என்று கேட்கும் அளவு ஆணவவெறியராகிவிட்டிருக்கும் மொரார்ஜி போன்றவர்களது 'அறிவுக் கண்' திறக்க வாய்ப்புக்கள் ஏற்படட்டும்.

அரசியல் சூழல்களுக்காகவும், சந்தர்ப்ப நெருக்கடிகளுக்காகவும் ஒரு கொள்கை'க்குத் தன்னை வளைத்துக் கொள்ளும் டெல்லி அரசு நீண்ட கால அம்சத்தில், தொலைநோக்கிப் பார்த்து, தன் கொள்கைகளை வகுக்கும் நிலைமைக்கு மாறிவர வழி காட்டட்டும்!

திரு. சாக்ளா அவர்கள் குறிப்பிடுவதுபோல், கல்வித் துறையில் புகுத்த நினைக்கும் மாற்றம், நாட்டின் ஒற்றுமை உணர்வை உருக்குலைத்து, துண்டுதுண்டாகச் சிதறிவிடும் தன்மையை மாற்றியமைப்பதாக இருக்கட்டும்.

இந்த வகையான செயல்களுக்கு வழிகாட்டுவதாக மாறவேண்டும்—மாற்றிக்கொள்ளவேண்டும் திரு. சாக்ளா அவர்களது பதவி விலகல் என்று விரும்புகிருேம்.

அது ஒன்றுதான், நாட்டின் ஐக்கியத்தைக் காக்கும்; எதிர்கால சந்ததிகளை நல்வழியில் நடாத்திச் செல்லும்!

✻




ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.